**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக இழிவுப் பெறுமதி பூச்சியமான ரூபா 8,146,724 ஆன நூலகப் புத்தகங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீடு நியமம் 3 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நூலகப் புத்த இருப்பு 2020 ஆம் ஆண்டு முதல் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023/2024 ஆம் ஆண்டுகளில் மீள்மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஒரு மானியில் இருந்து நிறுவனம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழத்தின் ஒரு பீடம் மின்சாரத்தை பெறுவதுடன் நிறுவனத்தின் மின் பாவனையின் ஒரு பகுதியாக 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 3,703,858 செலுத்துமாறு கொழும்பு பல்கலைக்கழகம் அறிவித்திருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் மின்சாரக் | கல்விப் பீடம் மற்றும் NILIS என்ற இரண்டிற்கும் ஒரே ஒரு மின்சார கணக்கு மாத்திரம் உள்ளமையால் கல்விப் பீடத்திற்கு கிடைக்கின்ற மொத்த மின்சாரப் பட்டியலில் 33.33 சதவீதம் கொழும்பு பல்கலைக்கழத்திற்கு செலுத்த முடியும் என உபவேந்தரால் இணங்கப் பட்டிருந்தது. பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் புதிய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் போது எதிர்வரும் ஆண்டிற்காக ஏதே ஒரு அளவை ஒதுக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்குதல் 2019 ஆம் ஆண்டில் இருந்து மீளாய்வாண்டு வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செய்வதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதனிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னய ஆண்டில் ரூபா 398,000 ஆன அட்டுறு செவினத்திற்காக மிகை ஒதுக்கீடு முன்னய ஆண்டின் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினங்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்காண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வங்கிக் கணக்கிற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 776,850 ஆன நேர் அனுப்புதல்கள் ஆண்டின் வருமானமாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது அந்தத் தொகையில் ரூபா 490,950 இனங்காணப்பட்டுள்ளதுடன் தற்போது ரூபா 285,900.00 தொகையே எஞ்சியுள்ளது. இந்த தொகையையும் இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நேர் செலவு வைத்தல் கால ரீதியில் இனங்கண்டு உரிய ஆண்டின் போது வருமானத்தில் செலவு வைப்பதற்கு முடியுமான வகையில் திட்டம் ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மாணவர் வருமானத்தில் 01 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 2,685,280 மீதி காணப்பட்டதுடன் அந்த மாணவர் வருமானத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கிடைக்கவேண்டிய பாடநெறிக் கட்டணம் பாடநெறியை விட்டுச் சென்ற மாணவர்களிடமிருந்தாகும். அவர்களின் பாடநெறிக் காலம் 03 வருடத்தை விஞ்சிய பின்னர் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அந்தந்த கணக்காண்டுக்குரிய கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 7 மற்றும் 8 ஆம் பிரிவுகள் மற்றும் 2007 யூன் 12 ஆம் திகதிய இலக்கம் 15/2007 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | தொடர்புடைய பிரமாணங்களுக்கு முரணாக 1996 ஒக்டோபர் 14 ஆந் திகதிய இலக்கம் 691 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது மூன்று உத்தியோகத்தர்களுக்காக ரூபா 220,000 வாகனக் கடன் வழங்கப்பட்டிருந்தது. | 1996 ஒக்டோபர் 14 ஆந் திகதிய இலக்கம் 691 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாகனக் கடன் வழங்கப்படுகின்றது. இலக்கம் 691 சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படாதிருந்ததுடன் அரச நிர்வாக சுற்றறிக்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவை (adopt) மீறாதுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய இலக்கம் 10/2017 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | கல்விசார் பதவியணியினரில் நான்கு பேர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 28,789,031 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்கை தொடர்பான பொதுவான முறைமையொன்றின் முன்மொழிவைச் சமர்ப்பிக்குமாறு உபவேந்தரின் குழுவிற்கு (CVCD) அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதுவரை வருகைப் பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1995 யூலை 14 ஆம் திகதிய இலக்கம் 636 என்ற பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 03 பரீட்சைகளின் பெறுபேறுகள் விநியோகிக்கும் நாட்கள் 123 முதல் 190 நாட்கள் காலதாமதமாகி இருந்ததுடன் 07 பரீட்சைகளின் பெறுபேறுகள் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 நிலைமையின் காரணமாக மற்றும் இணையவழி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட பாடங்களின் விடைத்தாள்கள் அப்போதே whatsapp முறைமையில் பெற்றுக்கொள்ளப்பட்ட போதும் தபால் மூலம் கிடைத்ததன் பின்னர் விடைத் தாள்கள் பரீட்சித்தல் போன்ற விடயங்கள் காரணமாக இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,229,596 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,136,404 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,366,000 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் மற்றும் நிறுவனத்தின் வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆகஸ்ட் 27 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆசிரியர் சேவைப் பிரமாணத்தில் ஆசிரியர் நூலகர் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, கலைமானி பாடநெறி மற்றும் டிப்ளோமா பாடநெறியை உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் கல்வி அமைச்சு அதற்குரிய நடவடிக்கை எடுக்காமை காரணமாக அந்த பாடநெறிக்காக ஆசிரியர்கள் விண்ணப்பித்திருக்கவில்லை. அதனால் மேற்கூறப்பட்ட பாடநெறி 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் கைவிடப்பட்டிருந்தது. நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தில் இலக்கிடப்பட்ட ஆசிரிய நூலகரின் பாடநெறிகளை வேவுகை செய்வதற்காக வேறேரு குழுவை இலக்காகக் கொண்டு நூலக தகவல் கற்கை பாடநெறி மற்றும் குறுங்கால பாடநெறிகளை அமுல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | 4000 பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்து அந்த நூலகங்களுக்காக ஆசிரிய நூலகர்கள் 4000 பேரை ஆட்சேர்த்து உலக வங்கி உதவியின் கீழ் 1998 இன் போது இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட பொதுக் கல்வி செயற்றிட்டத்தின் இரண்டாவது கூறின் பிரகாரம் (GEP 2) அவர்களைப் பயிற்றுவித்தல் மேலும் உயர்கல்வி தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய நூலக மற்றும் விஞ்ஞான நிறுவனம் ஸ்தாபிக்கப் பட்டிருந்தது.<br><br>ஆசிரிய நூலகர்களின் பதவி உயர்களுக்கு உரித்தான வகையில் ஆசிரியர் சேவைப் பிரமாணங்களைத் திருத்துதல் கல்வி அமைச்சு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற பணியாகும். இது தொடர்பாக கல்வி அமைச்சு மற்றும் ஏனைய உரிய தரப்பினருக்கு மீண்டும் மீண்டும் அறிவிப்பதற்கும் கலந்துரையாடுவதன் மூலம் அதற்காக முன்னின்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை எமது நிறுவனம் புறந்தள்ள முடியாதிருந்தது. | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தின் பிரகாரம் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |